19 11 1991

# இந்தியாவை சிதைக்கும் நாடுகளுடன் இலங்கை உறவு வைப்பது ஆபத்து

(கொழும்பு)

"இந்தியா சிதைந்து போவதை விரும்பும் நாடுகளுடன் இலங்கை எத்தகைய உறவுகளையும் வைத்துக்கொள்வது ஆபத்தானது".

இவ்வாறு சுற்றுலாத்துறை கிராமிய கைத்தொழில் அமைச்சர் எஸ். தொண்டமான் 'ஐலண்ட்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்(தார்).

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 கார்த்திகை 03 இதழ்: 279
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 19-11-1991

## அருள் 89 தாக்குதலில் இராணுவத்துக்கு சேதம்

(யாழ்ப்பாணம்)

விமன்காமம் பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவத்தின் காவலரண் மீது விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் இரவு அருள்-89 தாக்குதலை மேற்கொண்டதில் இராணுவ தரப்பில் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை கீரிமலை, தச்சன்காட்டுப் பகுதியிலுள்ள இராணுவத்தினர் இரவு 8-30 மணியளவில் பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டதில் பல வீடுகள் பலத்த சேதமடைந்ததுடன் பொதுமக்கள் சிலரும் காயமடைந்துள்ளனர். (வி)

# பட்டினி நிலையை விளக்கி நேற்று யாழ் நகரில் ஆர்ப்பாட்ட பேரணி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் தற்போது தோன்றியுள்ள பட்டினி நிலையை விளக்கி யாழ். நகரில் நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டபேரணி ஆயிரக்கணக்கான மக்களால் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலத்தில் சடலம் எடுத்துச் செல்லப்படும் பாடையொன்றும் எடுத்துச் செல்லப்பட்டது. இப்பாடை பின்னர் யாழ். செயலக வளவில் எரிக்கப்பட்டது.

நேற்றுக்காலை 8 மணிக்கு உரும்பிராயிலிருந்து ஆரம்பமான மேற்படி பேரணி, பலாலி வீதி, ஸ்ரான்லி வீதி, கஸ்தூரியார் வீதி, ஆஸ்பத்திரி வீதி ஊடாக யாழ் செயலகம்வரை நடைபெற்றது.

பேரணியில் கலந்து கொண்ட உரும்பிராய் செல்வபுரம், போகபுரம் பகுதியிலுள்ள நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த பொதுமக்கள் தமது பட்டினி நிலையை கூறி, யாழ். மேலதிக அரச அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் முன்பாக நின்று கதறி அழுதார்கள்.

கடந்த பல வருடங்களாக தாம் அடிப்படை வசதிகள் ஏதுமின்றி துன்பப்பட்டுவரும் அவலநிலையை எடுத்துக்காட்டு முகமாகவும் தொழில், உண(வு) இன்றி தாம் இறக்கும் நிலையை விளக்கும் முகமாகவும் இந்தப் பேரணியை நடத்தினர்கள்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தீவக மக்களின் பேரணி!

(வேலணை)

தீவகத்தில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து அகதி முகாம்களில் தங்கியிருக்கும் தீவகமக்கள் தங்களை பட்டினிச் சாவிலிருந்து உடனடியாகக் காப்பாற்றுமாறு கோரி ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை யாழ். நகரில் நேற்றுக் காலை நடத்தினர்கள்.

ஊர்வலத்தினர் யாழ். நகரிலிருந்து கச்சேரிவரை சென்று மேலதிக அரச அதிபரிடமும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்க...

(4ம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி வார கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் எழுச்சி வாரக் கூட்டங்கள் இன்று 19-ம் திகதி யாழ். மாவட்டத்தில் பல இடங்களில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் பிரிவில் புன்னாலைக்கட்டுவன் சந்தி அருகாமையிலும் மூளாய் பிள்ளையார் கோவிலடி மைதானத்(திலும்)...

(4ம் பக்கம் பார்க்க)

## ஜப்பானிலிருந்து 12,265 வெளிநாட்டவர் வெளியேற்றம்

(டோக்கியோ)

சட்ட விரோதமான முறையில் ஜப்பானில் குடியேறிய வெளிநாட்டவர் பலர், ஜப்பானிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாக ஜப்பானிய நீதி அமைச்சு நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

12,265 தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதாக தெரிவிக்கப்பட்ட அதேவேளையில், பெரும்பாலானோர் தொழிலாளர் நாட்டினைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்...

(4-ம் பக்கம்பார்க்க)

## அரச ஊழியர்களுக்கு நிர்வாகப் பட்டப்படிப்பு வசதி

(கொழும்பு)

அரசாங்க சேவையில் உள்ள ஊழியர்களுக்கு திறந்த பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை மேற்கொள்ள அரசு தற்போது புதிய நடவடிக்கை ஒன்றை மேற்கொண்டு வருகின்றது.

இப்புதிய திட்டத்தின்படி, இலங்கை நிர்வாக சேவையில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கு க. பொ. த. உயர்தர பரீட்சை தகைமையுடைய ஊழியர்களுக்கு நிர்வாகப் பட்டப்படிப்பு பயிற்சி வழங்கப்படும். இதேநேரம் சிற்றூழியர்களுக்கும் பயிற்சி ஒன்றை அறிமுகம் செய்வதற்கும் அரசு உத்தேசித்துள்ளது.

அரசாங்க சேவையாளர்களுக்கு வழங்கப்படும் மேற்படி பயிற்சி தமிழ், சிங்கள மொழிகளிலேயே வழங்கப்படும்...

(4-ம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகளை அழிப்பது எமது நோக்கமல்ல — ஹமில்டன்

(கொழும்பு)

"விடுதலைப் புலிகளை அழிப்பது எமது நோக்கமல்ல, அவர்களிடமிருந்து ஆயுதங்களைக் களைவதே எமது பிரதான நோக்கமாகும்"

இவ்வாறு, கூட்டுப் படைத் தலைமைப் பணிகத் தலைமைப் பதவியை நேற்று ஏற்றுக்கொண்ட ஜெனரல் ஹமில்டன் வனசிங்க, பதவியேற்பு வைபவத்தின் பின்னர் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

ஆயுதங்களை கைவிட்டு பேச்சுவார்த்தைக்கு விடுதலைப் புலிகள் வரும் பட்சத்தில், வடக்கு கிழக்கு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் ராணுவ நடவடிக்கை உடன் நிறுத்தப்படுமென்றும் வடக்கு கிழக்கு பகுதிகளில் தேர்தலை நடத்துவதற்கேற்ற சூழ்நிலையை ஏற்படுத்துவதே தங்கள் முதற் பணியென்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## ஆனையிறவுப் பாதை ஊடாக போக்குவரத்து

(கொழும்பு)

தனியார் வர்த்தகர்களும், அரச சார்பற்ற நிறுவனங்களும் ஆனையிறவு ஊடாக உணவுப் பொருட்களையும், மருந்து வகைகளையும் வடபகுதிக்கு எடுத்துச்செல்ல ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

வாகனங்கள் ஆனையிறவு முகாம் ஊடாக நாளாந்தம் காலை 9-00 மணிக்கும் பிற்பகல் 4-00 மணிக்குமிடையே செல்வதற்கு அனுமதிக்கப்படும்.

பாதசாரிகளும் இப்பாதையூடாகச் செல்வதற்கு அனு(மதிக்கப்படுவர்)...

(4-ம் பக்கம் பார்க்க)

## இராணுவ அதிகாரிகள் சகிதம் மூன்று அமைச்சர்கள் தீவுப்பகுதிக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

மூன்று அமைச்சர்கள், ஆயுதப்படை அதிகாரிகளுடன் தீவுப்பகுதிகளுக்கு திடீர் விஜயத்தை மேற்கொண்டுவிட்டு கொழும்பு திரும்பியுள்ளனர்.

அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா, காமினி அத்துகோறள, ராஜாங்க அமைச்சர் அசோக வடிவமங்காவ, வடபிராந்திய...

(4-ம் பக்கம் பார்க்க)

## பரீட்சை நீடிப்பு

(கொழும்பு)

விஞ்ஞானம், கணிதம் பயிலுநர் ஆசிரியர்கள் நியமனம் செய்வதற்கான போட்டிப் பரீட்சை, இம்மாதம் 29ம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக, கல்விச் சேவைக் குழுவின் செயலாளர் திரு ஏ. எஸ் வீரரத்ன தெரிவித்துள்ளார். (வி)

## கூட்டுப்படை இணைய நடவடிக்கை ஆரம்பம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை ஒடுக்குவதற்காக இலங்கை ராணுவத்தின் மூன்றுக் ராணுவத் தளபதி தலைமையின்கீழ் அமைக்கப்பட்ட கூட்டுப்படை விசே(ட)...

(4-ம் பக்கம் பார்க்க)

## குறைந்த விலையில் அரிசி

(உடுவில்)

உணவுப் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் உணவுப் பொருள்களை விற்பதற்கென நிர்ணயிக்கப்பட்ட அரிசி விலையிலும் பார்க்கக் குறைந்த விலையில் அரிசியை வழங்க, சுன்னாகம் (...)யில் உரிமையாளர்கள் முன்வந்துள்ளனர்.

ஒரு கிலோ நாட்டரிசியின் நிர்ணயிக்கப்பட்ட விலை ரூபா 31-00 ஆக இருப்பினும், அரிசி ஆலை உரிமையாளர்கள் பால...

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**புத்தகம்**

நாமம் சொல்லுவோம் நமனை வெல்லுவோம் எங்கும் கிடைக்கும். (சி-5546)

**நீமியா உரம்**

பருவம் தப்பிய உரம் பயிருக்கு பாதகம் விளைவிக்கும். வேம்பிலிருந்து தயாராகும் நீமியா உரம் பயிருக்கு ஊட்டம் அளித்து, பூச்சி, புழுக் கொல்லியாகவும் உதவுகிறது. "நீமியா உரம்" அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். - மில்க்வைற்.

(ஏ-1719)


## இராசி பலன்

**19-11-1991**

**செவ்வாய்க்கிழமை**

**(தமிழுக்கு கார்த்திகை 03)**

துவாதசி மு. ப. 8-33வரை ரேவதி பி. ப. 3-18 வரை, இராகுகாலம் மாலை 3-09முதல் 4-59 வரை, சுபநேரம் காலை 10-39 முதல் 12-09 வரை.

மேடம்: எதிரிகள் தொல்லை, மனவேதனை, குடும்பப்பிரிவு

இடபம்: வாக்குவன்மை, அதிகாரிகள் பாராட்டு, புகழ்.

மிதுனம்: காரியசித்தி, புதுப் பொருள் சேர்க்கை, மகிழ்ச்சி

கடகம்: தொழில் நஷ்டம், இனசனப்பகை, அலைச்சல்.

சிங்கம்: வீண் மனஸ்தாபம், குடும்பக் கவலை, அவதி.

கன்னி: தொழில் சிறப்பு, புத்திரர் உதவி, தெய்வீகச் செலவு.

துலாம்: சுபகாரியம், தொழில் முதலீடு, பணவரவு.

விருச்சிகம்: வயோதிபர் தொல்லை, காரியத் தடை, இடைஞ்சல்.

தனுசு: தொழில் பிணக்கு, வீண்வாதம், மனக்குறை.

மகரம்: ஆலய தரிசனம், விருந்துவைபவம், பெண் உதவி

கும்பம்: புத்திரர் கவலை, உடல் சோர்வு, சகோதரப் பகை.

மீனம்: தொழில் லாபம், காரியசித்தி, வெகுமதி.

ஜோதிடர்

## பிரதிக் கல்விப் பணிப்பாளர்

(அச்சுவேலி)

மருதனார்மடம் கோட்டக் கல்வி அலுவலகத்தின் மேலதிக பிரதிக் கல்விப்பணிப்பாளராக திரு. எஸ். கணேசவேல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி நிர்வாக சேவையைச் சேர்ந்த திரு. எஸ். கணேசவேல் பதவி உயர்வுடன் மருதனார்மடம் கோட்டத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

## மத்தியஸ்தர்சங்க புதுவருட நிர்வாகிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த சனிக்கிழமை தலைவர் திரு. கே. பதுருசின் தலைமையில் சென். ஜோசப் கல்லூரியில் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எம். டி. தம்பிராசா, காரியதரிசி திரு. ஏ. தேவராசா, தனாதிகாரி; லப்டன் டி. ஏ. எம். குணசிங்கம், உபதலைவர்கள்: ஏ. என். வை. மொறிஸ், எஸ். கே. செபஸ்தியாம்பிள்ளை, ஒலிவேஸ் அன்ரனிப்பிள்ளை, ஜி. எம். செபஸ்தியாம்பிள்ளை, எம். அன்னுத்துரை, உபகாரியதரிசி: எம். பிரான்சிஸ், நிர்வாக உறுப்பினர்கள்: பி. ஆர். தம்பிநாயகம், கே. விமலராஜா, வி. திருஞானசம்பந்தர், ஜி. எம். அருள்பிரகாசம், ஜே. வை. சத்தியோ, எம். நரேந்திரநாதன். (வி)

## புலிகள் கடல் மார்க்கத்தையே பயன்படுத்துகின்றனர்

(புதுடில்லி)

விடுதலைப் புலிகள் இலங்கைக்கு ஆயுதங்களை கடத்துவதற்கு தொடர்ந்தும் கடல்மார்க்கத்தையே பயன்படுத்துவதாக பிரபல இந்தியப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

இதே வேளையில் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தினை கடற்பகுதியில் கட்டுப்படுத்துமுகமாக மத்திய மாநில அரசுகள் பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

## மருத்துவ பீடம்

மூன்றுவது வருட மருத்துவப் பயிற்சி நெறி ஆரம்பம் (1988 பிரிவு)


மூன்றுவது வருட மருத்துவப் பயிற்சி நெறி (1988 பிரிவு) 1992 ஜனவரி 6ஆம் திகதி ஆரம்பமாகும்.

பதிவாளர்

(எ-1718)

## வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## 2-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
02-10-1940

— ✶ —

இறப்பு:
19-11-1989

**சந்தியா செபஸ்ரி**
**அருளப்பா சின்னராசா (P. M.)**

[உப தபால் அதிபர் - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்]

அன்பின், பண்பின், பாசத்தின் திருவுருவாய் சிறந்து வளர்ந்து யாவரும் P. M. என புகழ்பாட வாழ்ந்தீர்கள். எம்மைப்பிரிந்து ஆண்டு இரண்டு சென்றாலும் எம் இதயக்குமுறலை ஒயவில்லை. நித்திய ஜீவியத்தில் வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

உமது பிரிவால் வாடும்:
சகோதரர்கள், சகோதரிகள்,
பெருமக்கள்.

(சி 5608)

## மாவீரர்நாள் ஏற்பாடுகள்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மாவீரர் எழுச்சிவார நடவடிக்கைகள் மிகத்துரிதமாக நடைபெற்றுவருகின்றன. வடமராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் தினமும் மாவீரர் எழுச்சிவாரக் கருத்தரங்குகள் நடைபெற்றுவருகின்றன.

**கரகாட்ட நிகழ்வு**

கடந்த 15ம் திகதி முதல் மாவீரர்களின் மகிமைபற்றிய கரகாட்ட நிகழ்வுகளும் வடமராட்சியின் பல இடங்களில் இடம்பெற்றுவருகின்றன. பாடசாலைகள் மட்டத்தில் மாவீரர் தின கவிதை, கட்டுரைப் போட்டிகளும் நடைபெற்றுவருகின்றன.

**வீதிகள் துப்பரவு**

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய வட்டங்களைப் பகுதிகளில் மாவீரர் தின கிராமிய குழுக்கள் திறாரவைகளில் தெரிவுசெய்யப்பட்டு இக்குழுக்களும் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகின்றன. வீதிகள், ஒழுங்கைகள் யாவும் சுத்திகரிக்கப்படுகின்றன.


**அலங்கார வளைவுகள்**

பல இடங்களில் அலங்கார வேலைகள் இடம்பெற்றுவருகின்றன. அலங்கார வளைவுகளில் மாவீரர்களின் மகிமைப் புகழ் தொடர்பான கருத்துள்ள சித்திரங்கள் தீட்டப்பட்டுவருகின்றன.

**அலங்கார பந்தல்கள்**

புலோலி, வல்வெட்டித்துறை, நெல்லியடிப் பகுதியில் மாவீரர் வார பெரிய அளவிலான அலங்காரப் பந்தல்கள் அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாவீரர் வார ஒழுங்குகளுக்காக வடமராட்சிப் பகுதியில் கரவெட்டியில் 85 கிராமியக் குழுக்களும், பருத்தித்துறையில் 35 கிராமியக்குழுக்களும், வடமராட்சி கிழக்கில் 17 கிராமியக் குழுக்களும், அச்சுவேலியில் 17 கிராமியக் குழுக்களும் செயற்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (58)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தாமோதரம்பிள்ளை நடராசா**
(தபால் சேவகர் - மல்லாகம்)

தோற்றம்:
06-02-1944

மறைவு:
19-11-1990

திதி: 08-12-1991


எம்மை எக்குறையும் இன்றி சீராட்டிப் பாராட்டி சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழவைத்த எம் தெய்வமே! ஆண்டு ஒன்று கழிந்தாலும் உங்கள் நினைவால் நாம் ஏங்கித் தவித்தாலும் உங்கள் ஆத்மா சாந்தியடைய நெஞ்சார இருகரம் கூப்பி எல்லாம்வல்ல இறைவனை வணங்கி பிரார்த்திக்கிறோம்.

தங்கள் நினைவால் துயருறும்:
குடும்பத்தினர்

நரியிட்டான்,
மல்லாகம்.

(சி 5606)

## 1-ம் வருட நினைவஞ்சலி



**லூயிஸ் மேரிமெக்டலின் (மலர்)**

மண்ணில்:
13-06-1946

விண்ணில்:
19-11-1990

"ஜீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்"

சிரித்து சிரித்து கதைகள் சொல்லி
எங்கள் குழந்தையாய் நீயிருந்தாய்
களவமில்லா மழலையின் சிரிப்பும்
தாலாட்டும் கீதமும் - எங்கள்
மனதை விட்டு அகலாதம்மா
மலர்ந்த மலராகவே - நீ
இறைவன் பதம் சேர்ந்து விட்டாய்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக இன்று 19-11-91 செவ்வாய்க்கிழமை காலை 6.00 மணிக்கு யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சிமாதா ஆலயத்திலும், 6.15 மணிக்கு மானிப்பாய் புனித அந்தோனியார் ஆலயத்திலும் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இவரின் ஆத்மா சாந்தியடைய மன்றாடும்படி பணிவுடன் வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் வருந்தும்:
கணவன், பிள்ளைகள், மருமகன்,
அம்மா, ஐயா, சகோதரர்கள்,
உற்றார், உறவினர்.

(சி 5607)

சேதமடைந்த கட்டிடங்களின்

# நிவாரண விண்ணப்பங்களை அனுப்புமாறு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தனியார் கட்டிடங்களில் இயங்கிவந்த அரச காரியாலயங்கள் அண்மைக்கால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்திருப்பின், அதற்குரிய நிவாரணத்தைப் பெறுவதற்கு விண்ணப்பிக்கும் கடைசித் திகதி அடுத்த மாதம் 31-ம் திகதி என அரசு தற்போது அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் இராணுவ நடவடிக்கைகளினால், நூற்றுக்கணக்கான தனியார் கட்டிடங்களில் இயங்கிவந்த அரச அலுவலகங்கள் சேதமடைந்துள்ள போதிலும், இதுவரை எந்த ஒரு திணைக்களத்திடமிருந்தும் சேதமடைந்ததற்கான விண்ணப்பங்கள் யாழ் செயலகத்துக்கு கிடைக்கவில்லையாம்.

சேதமடைந்த மேற்படி கட்டிடங்களுக்கு, ஒரு கட்டிடத்துக்கு 50 ஆயிரம் ரூபாவுக்கு மேற்படாத நிவாரணம் வழங்கப்படுமென, அரசு கடந்த இருமாதங்களுக்கு முன்பே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (வி)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

தீவுப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்களுக்கான (ஆசிரியர்கள் உட்பட) கலந்துரையாடல் யாழ் இந்துக் கல்லூரியில் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

அரச ஊழியரின் தற்போதைய நிலை குறித்து இக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளது.

## புலிகளின் குரல் ஓராண்டு விழா

(யாழ்ப்பாணம்)

புலிகளின் குரல் வானொலியின் ஓராண்டு பூர்த்திவிழா நாளை புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் நாட்டியாஞ்சலி, தளிர்கள், நாடகம், வில்லிசை, பரிசளிப்பு, வாழ்த்துரை, ஆய்வுரை, இசை நிகழ்ச்சி போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

## மாவீரர் வாரத்தில் பிரயாண அனுமதி நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் வாரத்தினையொட்டி சகல அவசர பிரயாண அனுமதி வழங்கும் அலுவலகங்களும் இம்மாதம் 21-ம் திகதியும் 27-ம் திகதியும் இயங்கமாட்டாது என்று தமிழீழ போக்குவரத்து கண்காணிப்பு பிரிவினர் அறிவித்துள்ளனர்.

## மாவீரர்தின பேச்சு போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் தினப் பேச்சுப் போட்டிகள் பாடசாலை கொத்தணி, கோட்ட மட்டத்தில் பங்குபற்றிய மாணவர் விபரங்களை இம்மாதம் 20ந் திகதிக்கு முன்னதாகக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கும்படி கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றார்.

## ராஜீவ் கொலை வழக்கு தாக்கல்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலைவழக்கு பற்றிய குற்றப்பத்திரிகையை மத்திய புலனாய்வுக்குழு அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படுமென்று மத்திய புலனாய்வுத் துறையின் சிறப்பு குழுவின் தலைவரான இன்ஸ்பெக்டர் ஜெனரல் கார்த்திகேயன் தெரிவித்தார். (வி)

## காவலரண் மீது தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கொம்மாந்துறை இராணுவ முகாம் காவலரண் ஒன்றின் மீது புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

கடந்த 16ம் திகதி இத்தாக்குதல் நடத்தப்பட்டது.

### பட்டினி நிலையை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

“பாலகனுக்கு பால் இல்லை பாருங்கள் இந்தக் காட்சியைப் பாரீர்”, “சர்வதேச அமைப்புகளே! சாவா உங்கள் முடிவு?” “பட்டினியில் வாடும் வேதனை உங்களுக்குப் புரியாதா”, “ஒடுக்காதே ஒடுக்காதே தமிழ் மக்களை ஒடுக்காதே” “உரிமையைத் தா இல்லையேல் எங்களைச் சாகவிடு” ஆகிய கோஷங்களை எழுப்பியவாறு பேரணியில் வந்தவர்கள் யாழ். செயலகம் வந்து சேர்ந்தனர்.

மேலதிக அரசாங்க அதிபரிடம் இவர்களது பட்டினி நிலைபற்றி எடுத்துக் கூறப்பட்ட பின் பாடை செயலக வாயில் தீமூட்டி எரிக்கப்பட்டது. (வி-56)

### இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராணுவ தளபதி லெப்டினன் கொப்பேகடுவ, பிரிகேடியர் விஜயவிமலரத்ன, வட பிரதேச கட்டளைத் தளபதி ஆகியோர் ராணுவ கட்டுப்பாட்டிலுள்ள தீவுப் பகுதிகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமையை அவதானித்தனர்.

ஜனாதிபதி பிரேமதாசவின் பணிப்பின் பேரிலேயே இவ் விஜயம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### இந்தியாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்னார்:

கொழும்பில் நடக்கவிருந்த சார்க் உச்சி மாநாட்டை இந்தியா தடுத்துவிட்டதாக இலங்கை எழுப்பியுள்ள புகாரை நிராகரித்த திரு. தொண்டமான் இதற்கான பழியை இந்தியா மீது சுமத்துவதற்கு பதிலாக அதனுடன் இணக்கமான முறையில் கதைத்து ஒற்றுமையை நிலைநாட்டிக் கொள்வதே இலங்கைக்கு நல்லது என்றும் அப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

### ஆனையிறவுப் பாதை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திக்கப்படுவார்களென்றும் யாழ். குடாநாட்டிலிருந்து பொருட்களை எடுத்துச்செல்லும் சகல வாகனங்களும் கடுமையான சோதனைக்குள்ளாக்கப்படுமென்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்கள் தடுக்கப்பட்டு, அவைகள் மீது அவசரகாலச் சட்ட விதியின்கீழ் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்றும் அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## விடுவிக்குமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்ட இலங்கை மின்சாரசபை ஊழியர்களில் இதுவரை விடுவிக்கப்படாத ஊழியர்களை விடுவிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு இலங்கை மின்சார சபை சர்வதேசசெஞ்சிலுவைச் சங்கத்திடம் கோரியுள்ளது.

இவர்களுடன் கடத்தப்பட்ட தாய்லாந்து வாசிகள் இருவரும் நேற்றுமுன்தினம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் பூனேவில் வைத்து ஒப்படைக்கப்பட்டது தெரிந்ததே. (மா)

### குறைந்த விலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லையாளர்களின் நன்மை கருதி 30-00 ரூபாவுக்கு ஒரு கிலோ நாட்டரிசியை வழங்கக் கண்ணும் வர்த்தக சங்கத்திடம் தெரிவித்திருப்பதாக மேற்படி வர்த்தக சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (109)

### தீவக மக்களின்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கத்திடமும், தீவக விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலகத்திலும் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இந்த மகஜரில் தீவக மக்களை பட்டினிச் சாவில் இருந்து காப்பாற்றுக; அகதி முகாம்களில் உள்ளவர்களுக்கு ஏற்படும் நோய்களுக்கான மருத்துவசதிகளை உடன் வழங்குக; குழந்தைகளுக்கான உணவுப் பொருட்களை உடன் வழங்குக; தீவகத்தில் தற்போது தங்கியுள்ள ஸ்ரீலங்கா இராணுவத்தினரை உடன் வெளியேற்றி தீவக மக்களை மீண்டும் அங்கு கொண்டுபோய் குடியேற்றுவதற்கான வசதிகளைச் செய்து தர உடன் நடவடிக்கைகளை மேற்கொள்க. என்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்த மகஜர் கையளிக்கப்பட்டது (71, 56, 75, வி)

## இந்திய தேர்தல் முடிவுகள்

(புதுடில்லி)

கடந்த சனிக்கிழமை இந்தியாவில் நடந்த 15 நாடாளுமன்ற 55 சட்டப் பேரவைக்கான இடைத்தேர்தல்களில் இதுவரை அறிவிக்கப்பட்ட முடிவுகளின் விபரம் வருமாறு:

| | லோக்சபை | சட்டப்பேரவை |
|---|---|---|
| அறிவிக்கப்பட்டவை | 11 | 47 |
| இந்திரா காங்கிரஸ் | 7 | 15 |
| பி. ஜே. பி. | 2 | 15 |
| போர்வார்ட் புளக் | 1 | — |
| பஹுஜன் சமாஜ்வாதி | 1 | — |
| சமாஜ்வாதி | — | 5 |
| ஜனதாதள் | — | 6 |
| இந்திய கொம்யூனிஸ்ட் | — | 1 |
| சுயேச்சை | — | 5 |

## நூல்வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ கலை இலக்கிய இணையத்தின் எழுத்தாளர் இன்மாலைப் பொழுது நிகழ்ச்சியில் கவிஞர் சத்தியசீலனின் 18-வது சிறுவர் ஆக்கமான சிறுவர் செய்யுள் பைபிள் கதைகள் வண. கலாநிதி எஸ். ஜெபநேசனால் இன்று வெளியிட்டுவைக்கப்படும்.

### அரச ஊழியர்களுக்கு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

நும் இதன் முதல்கட்டப் பயிற்சி அடுத்த வருடம் ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்படுமென்றும் பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

### மாவீரர் எழுச்சி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திலும் தென்மராட்சியில் மகளிர் பாடசாலையிலும், நாவற்குழி மகா வித்தியாலயத்திலும் வடமராட்சியில் செம்பியன்பற்று வடக்கு றோ. க. பாடசாலையிலும் நடைபெறவுள்ளன.

தீவகப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கான எழுச்சிக் கூட்டம் யாழ் பார்வதி வித்தியாலயத்திலும், நாவலடியிலும் இன்று மாலை 5-00 மணிக்கு நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி முக்கிய பிரமுகர்கள் கலந்து கொண்டு கருத்துக்கள் வழங்குவார்கள்.

### கூட்டுப்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இணைப்பு நேற்றிரவு தனது நடவடிக்கையை ஆரம்பித்திருப்பதாக கொழும்பிலுள்ள ராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த கூட்டு அமைப்பின் தலைவராக ஜெனரல் லெப்டினன் ஹமில்டன் வனசிங்க தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## பதவியேற்பு

(கொழும்பு)

ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா கூட்டு நடவடிக்கை தலைமையகப் பணிப்பாளராக நேற்று கடமையேற்றார்.

வனசிங்கா தனது சேவைக் காலத்திலேயே ஜெனரல் பதவியைப் பெற்றுக்கொண்ட மூன்றாவது இலங்கையரானார்.

1958ம் ஆண்டு ஜெனரல் வனசிங்கா கடேட் அதிகாரியாக இராணுவத்தில் சேர்ந்தார். (மா)

## கைதி பிடிபட்டார்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமானப் படை முகாமைத் தாக்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு வெலிக்கடை சிறையில் வைக்கப்பட்ட ஜே. வி. பி. பிரதேச தலைவர் சேனலிஅய்யா சிறையிலிருந்து தப்பியோட முயன்ற போது காவி பொலிசாரால் சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டார்.

தற்போது நிர கண்காணிப்புப் பிரிவில் பலத்த காவலில் வைக்கப்பட்டுள்ள இவர் மீது தீவிர விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் விமானப்படை முகாம் தாக்குதல் தவிர வேறும் பல குற்றச் செயல்களிலும் இவர் ஈடுபட்டுள்ளதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர். (ல)

### ஜப்பானிலிருந்து

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது:

நிர்மாணத்துறை, கைத்தொழில்துறை, மற்றும் உல்லாச விடுதிகளில் கடமையாற்றும் சகல தொழிலாளர்களும் ஆண்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி வெளியேற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் ஜப்பானில் தொழிலாளருக்குப் பெரும் பற்றாக்குறை நிலவுவதும் குறிப்பிடத்தக்கது. (ல)

புலிகளின் குரல்
VOICE OF THE TIGERS

அன்புடையீர்!

புலிகளின் குரல் வானொலியின் ஓராண்டு பூர்த்தி விழாவிலும், அதையொட்டிய பரிசளிப்பு நிகழ்ச்சியிலும் கலந்துகொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

புலிகளின் குரல்
தமிழீழம்.

★ ஆரம்பம்
★ நாட்டியாஞ்சலி
★ தளிர்கள்
★ நாடகம்
★ வில்லிசை
★ பரிசளிப்பு
★ வாழ்த்துரை
★ ஆய்வுரை
★ இசை நிகழ்ச்சி
★ நிறைவு

★ யாழ். இந்துக் கல்லூரி
★ 1991-11-20 (புதன்)
★ மாலை 3-00 மணி

1
வானொலி
1991

பிரவேசம் இலவசம்

(ஏ 1720)

இப்பத்திரிகை “ஈழநாடு” லிமிடெட்டுக்காக [illegible] யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு நவம்பர் மாதம் 19-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registred as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/10836/91.